[21st November 1963

திரு. முனு. ஆதி: ஜனதிபதி அவர்களே ஆசிரியர்களுக்கு முக்கியத்துவம் அளித்து வருகின்றூர்கள். ஆகவே இனிமேலாவது ஆசிரியருக்கு என்று தனித் தொகுதி ஏற்படுத்த உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஆசிரியர்களுக்குத் தனித் தொகுதி ஏற்படுத்திஞல்தான் அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்ததாக ஆகும் என்று எண்ணக்கூடாது. இது இல்லாமலே ஆசிரியர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. பங்ஷனல் ரெப்ரசென்டேஷன் என்று வேறு யாருக்கும் இல்லே. ஆசிரியர் களுக்குத்தான் இருக்கிறது. இதுகூட இருக்கவேண்டுமா வேண் டாமா என்ற யோசனே இருந்து வருகிறது.

கார் விபத்து (கடலூர்)

*393 **கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) கடலூரில் 1963, ஏப்ரல் மாதக் கடைசி வாரத்தில் பிருந் தாவன் ஹோட்டலுக்கு அருகில் ஒரு இளேஞர் காரில் சிக்கி மரண மடைந்தார் என்பது உண்மையா ?

(இ) அப்படியாஞல், அந்தக் கார் யாருடையது, அதில் இருந்த அதிகாரி யார் ?

(உ) எவ்வாறு இந்த விபத்து ஏற்பட்டது ?

(எ) அதன் மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) ஆம்; உண்மை.

(இ) இந்தக் கார் திருச்சியைச் சேர்ந்த ஸ்ரீ நாகநாத ஐயர் என்பவருடையது. விபத்து நடந்த சமயம் காரில் தென்ஆர்க் காடு மாவட்டக் கலெக்டரின் தனி உதவியாளர் இருந்தார்.

(உ) 28-4-1963-ல் கடலூர் பிருந்தாவன் ஹோட்டலிலிருந்து மேற்படி கார் வந்து கொண்டிருந்தபோது காரின் வேகம் திடீரென்று அதிகரித்தது. கார் பக்ஸ் ரோடை நெருங் கும்போது, டிரைவர் காரை இடப்பக்கமாக திருப்பினர். அப் போது கார் அவர் கட்டுக்கு மீறி அங்கே சைக்கிளில் சென்று கொண்டிருந்த சூசைராஜ் என்பவர் மீது ஏறிவிட்டது. அவருக்கு ஏற்பட்ட காயங்களின் காரணமாக அவர் உயிர் இழந்தார்.

(எ) அந்த டிரைவர் மீது தென் ஆர்க்காடு ஜில்லா மாஜிஸ்ட் ரேட் நீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. அந்த டிரை வர் சட்டப்படியான டிரைவிங் லைசென்ஸ் இல்லாமல் காரை ஓட்டி யதற்காக மாஜிஸ்ட்ரேட்டு அவருக்கு 25 ரூபாய் அபராத தண் டனே விதித்தார். ஆனல் இந்திய தண்டனேச் சட்டத்தின் 304-எ பிரிவின்படிக்கான குற்றச்சாட்டிலிருந்து டிரைவர் விடுவிக்கப்பட் டார்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: இந்த விபத்து நடைபெறுவதற்கு முன்பாக பிருந்தாவனம் ஹோட்டலில் அந்த மாவட்டத்தில் இருந்து ஆர்.டி.ஓ. மாற்றலாகிப் போகிறூர் என்பதற்காக அதிகாரி

21st November 1963]

கள் எல்லாம் ஒன்றுகூடி அளிக்கப்பட்ட விருந்துபசாரம் நடந்தது என்பது உண்மையா? விபத்து அந்த ஹோட்டலில் இருந்து 25 கஜ தூரத்திற்குள் நடந்திருக்கிறது. அந்த இருபத்தைந்து கஜத்திற்குள் காரின் வேகம் எப்படி அதிகரித்தது? அந்தக் காரில் இருந்தவர்கள் குடிபோதையில் இருந்தார்கள் என்று சொல்வது உண்மையா?

கனம் திரு. பூ. கக்கன்: அந்தமாதிரித் தகவல் என்னிடத்தில் ஒன்றும் இல்லை.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: அந்தக் கார் விபத்தில் சிக்கிய இளைஞன் உடனே ஸ்தலத்தில் மாண்டு இருக்கிறான். அந்தக் காரில் இருந்தவர்கள் அத்தனைபேரும் அதிகாரிகள். அப்படி இருந்தாலும் அந்தக் கார் டிரைவர் குற்றவாளியல்ல என்று . . . .

MR. SPEAKER: The Court has decided that he be acquitted. That is the answer of the Hon. Minister. The hon. Member cannot ask for anything more than that.

சேலம் மாவட்டத்தை இரு பிரிவுகளாக்குதல்

* 394 கேள்வி.—திரு. முனு. ஆதி: கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தை இரு பிரிவுகளாக்கும் திட்டம் பற்றி திட்டம் வகுக்க நியமிக்கப்பெற்ற விசேஷ அதிகாரியிடமிருந்து அறிக்கை வந்ததா?

(இ) ஆமெனில் எப்போதிலிருந்து இத்திட்டம் அமுல்படுத்தப்படும்?

(உ) இதே போன்று வேறு ஏதேனும் மாவட்டங்களையும் இரண்டாகப் பிரிக்கும் உத்தேசமுண்டா?

THE HON. SRI V. RAMAIAH: (அ) Yes, Sir.

(இ) The Government have ordered that the bifurcation of Salem district should be deferred for the duration of the Emergency.

(உ) Does not arise.

திரு. முனு. ஆதி: இந்த மாவட்டங்களை நிலப்பரப்பின் அடிப்படையில் பிரிக்க உத்தேசமா? அல்லது மக்கள் தொகையைக் கருத்தில் வைத்துப் பிரிக்க உத்தேசமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா: இதைப் பலமுறைகள் பரிசீலனை செய்து சேலம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கவேண்டுமென்ற முடிவை எடுத்தோம். அதற்குத் தகுந்த முறையில் ஒரு அதிகாரியை நியமனம் செய்து அந்த மாவட்டத்தைப் பிரிக்கக்கூடிய வேலை அவர்கள் பார்த்து முடிவு செய்யும்படி செய்தோம். ஆனால் கனம் அங்கத்தினர் நன்றாக உணர்ந்திருப்பார்கள். தேசீய நெருக்கடியினால் இந்த மாவட்டத்தைக் கூட இரண்டாகப் பிரிக்கும் வேலையை தற்காலிகமாக நிறுத்தி வைத்திருக்கிறோம்.